மக்கள் என்ன விரும்புகிறார்களோ அதைப் போல தமிழக அரசு—புரட்சித் தலைவியின் அரசு தொடர்ந்து அரசு மருத்துவ மனையாகச் செயல்பட நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 28, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

28—

மதுரை மருத்துவக் கல்லூரியில் 'எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்' பயன்படுத்துதல்.

*9671—டாக்டர் மு. காளிராஜன் :

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் ரூ. 60 லட்சம் மதிப்புள்ள 'எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்' (Electron Microscope) பயன்படுத்தப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பயன்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி; மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உரிய நபர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்கப் பட்டபின் முழுவதுமாக இக்கருவி பயன்படுத்தப்படும்.

டாக்டர் மு. காளிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலக்ட்ரான் மைக்ராஸ்கோப் 1987-ல் வாங்கப்பட்டும் இன்றுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இந்த எலக்ட்ரான்மைக்ராஸ்கோப் அதிக சக்திவாய்ந்த மைக்ரோஸ் கோப். நமது மாநிலத்தில் முதன்முதலில் மதுரை மருத்துவக் கல்லூரியில் தான் வாங்கப்பட்டிருக்கிறது. இதனுடைய மாக்னி பிகேஷன் டைம் என்று சொல்லக்கூடிய அளவு 8.2 லட்சம் மடங்கு பெரிதாக்கிக் காட்டக்கூடிய சக்தி வாய்ந்த மைக்ரோஸ் கோப் ஆக இது இருக்கிறது. வேறு பல இடங்களில் இருக்கிற மைக்ரோஸ்கோப்புகள் பல ஆயிரம் மடங்கு தான் பெரிதாக்கிக் காட்டும். 3 நாட்களில் பிற கருவிகள் மூலம் கண்டுபிடிக்கக்கூடிய

பரிசோதனைகளை இந்த மைக்ரோஸ்கோப் மூலம் ஒரு மணி நேரத்தில் பரிசோதனை செய்துவிடலாம். அந்த அளவிற்கு சக்தி வாய்ந்தது மைக்ரோஸ்கோப். அதை ஆபரேட் பண்ணுவதற்கும் இன்டர்பிரட் பண்ணுவதற்கும் உரிய ஆட்கள் இல்லை என்று கல்லூரி முதல்வர் கூறுகிறார். ஆகவே அதற்குரிய நடவடிக்கை துரிதப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலேதான் அந்தக் கருவி பொறுத்தப்பட்டதாக இங்கே தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அங்கே முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லையேயொழிய ஓரளவிற்கு அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள் அதற்குத் தேவை. அதை உணர்ந்துதான் அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து இருக்கிறது. டாக்டர் மீனாட்சிசுந்தரம் அடுத்து ஆர். குருசாமி என்ற இரண்டு பேரும் இந்தப் பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் பயிற்சி பெற்று வந்தவுடன் இது முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 29, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

29 —

அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் அமைத்தல்,

*10276 —திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளில் குறிப்பாக கிருட்டிணகிரி வட்ட அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,